**மஹஓய பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹஓய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,577,617 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட உனுவதுர புபுலே இல் 7 கடைகள் மற்றும் கெக்கிரிஹேன கடைத்தொகுதியில் 2 ஆம் கட்டத்தின் கீழ் கைவேலி அமைத்தல் என்பன மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | இரண்டாவது சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட டேலர் பௌசரின் பெறுமதி ரூபா 335,000 தொகை மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | அதனை எதிர்வரும் வருடத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2013 இல் தெயடகிருல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட மஹஓய பேரூந்து நிலையம் மற்றும் கடைகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2013 ஆம் ஆண்டில் தெயடகிருல நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மஹஓய பேரூந்து நிலையம் மற்றும் கடைகள் என்பன 2018.03.16 ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலாளரால் மஹஓய பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அப்பெறுமதி தொடர்பாக எந்தவித ஆவணமும் எங்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அது நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கி மூலதனமாக்குவதற்கு முடியாதிருந்தது. அந்த கடைகளை மதிப்பீடு செய்யப்பட்டு கேள்வி நடைமுறைகளின் மூலம் வாடகைக்கு வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iv) | 2018 ஆம் ஆண்டின் போது பிரதேச சபையின் இணையதளத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 130,000 பெறுமதியான கற்பனைப் பெறுமதி கற்பனைச் சொத்தாக கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | அதற்குரிய சீராக்கங்களைச் செய்து கற்பனைச் சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | 2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 2,570,288 தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்பட்ட தவறினால் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தமையினால் 2019 ஆம் ஆண்டில் உரிய கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. |
| (vi) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 136,795 தொகை, 2017 |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் ரூபா 229,845 தொகை ரூபா 89,185 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். | திசெம்பர் 31 இல் ரூபா 76,520 தொகை மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,530 தொகையான நிலுவைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 332,675 தொகை நிதிக் கூற்றுக்களில் ரூபா 70,946 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | பதிவேடுகளுக்கு கொண்டுவரும் போது பிழையான பிழையாக கொண்டுவரப்பட்டிருந்தது டன் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ரூபா 332,675 தொகை செலுத்த வேண்டியிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 49,293 தொகை செலுத்தப்பட்டதுடன் மிகுதி ரூபா 381,968 தொகை இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (viii) | 2018 ஆம் ஆண்டில் பிரதேச சபை நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இரண்டு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 94,492 தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | தவறினால் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் தற்போது கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ix) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 553,811 | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதற்குரிய சீராக்கங்களைச் செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை கணக்கீடு செய்யப்படவில்லை. | | |
| (x) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்காக 2014 ஏப்ரல் மாதத்திற்கு முன்னைய காலப்பகுதிக்காக செலுத்தப்பட்ட ரூபா 105,492 தொகையான நிலுவைக் கடன் வட்டி திரண்ட நிதியத்தில் சீராக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதற்குரிய சீராக்கங்களைச் செய்து திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xi) | வருமானத்திற்கான வைப்புக் கணக்கில் வருமானத்தில் ஈடுசெய்யப்பட வேண்டிய ரூபா 1,347,316 தொகைக்குப் பதிலாக ரூபா 1,721,316 தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள ரூபா 374,000 தொகை சீராக்கம் செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் ரூபா 121,678,390 ஆக இருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 83,835,119 ஆனமையால் ரூபா 37,843,271 தொகையான இணக்கமின்மைக் காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு முன்மொழிவொன்றை சமர்ப்பித்து 2011 ஆம் ஆண்டில் நிலையான சொத்துப்பதிவேட்டில் உள்ளடக்கப்படாத சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அந்த குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற சொத்துக்களின் பெறுமதிகளை நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 311,021 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2013 ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய அந்தத் தொகையை விரைவாக செலுத்துவதற்காக தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து உரிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 122,195,515 தொகையான 04 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 54,567,886 தொகையான 02 பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் ஏடுகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிவேடுகளைப் பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| i. | 19(i) மற்றும் (ii) ஆம் பிரிவு | சபையினால் 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் நாட்கூலி சாரதி மற்றும் அமைய சுகாதார தொழிலாளர்கள் உள்ளூராட்சி ஆணையாரின் அங்கீகாரம் இன்றி சேர்க்கப்பட்டிருந்தனர். | சபை அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2018 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பெறப்பட்ட சபை அங்கீகாரத்துடன் நாட்கூலி அடிப்படையில் சேர்ப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| ii. | 132(ஊ) ஆம் பிரிவு | அமைச்சரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் இன்றி சபை அதிகாரப் பிரதேசத்தில் பதிவுசெய்துள்ள தொண்டர் சங்கங்களுக்காக ரூபா 1,584,660 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களை பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சபை அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஆளுனருக்கு அங்கீகாரத்துக்காக கடிதம் அனுப்பப்பட்டதுடன் உரிய அங்கீகாரம் பெறப்படும் வரை சபை தீர்மானத்தின் பிரகாரம் இழப்பீட்டுக்கு உட்பட்ட வீடுகளுக்கு உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நிதிப் பிரமாணம் 110 | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களுக்காக ஏற்படுகின்ற இழப்பு நட்டங்களை உள்ளடக்குவதற்கு இழப்பு மற்றும் நட்ட பதிவேடொன்று தற்போது பேணப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,465,381 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,767,509 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| (i) | வீதவரியும் வரியும் | 400 | 439 | 439 | - | - | 383 | 383 | - |
| (ii) | வாடகை | 7,531 | 9,526 | 8,090 | 1,435 | 6,612 | 6,013 | 5,902 | 453 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 290 | 348 | 348 | - | 286 | 302 | 302 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,048 | 8,232 | 7,860 | 371 | 4,778 | 6,391 | 6,019 | 323 |

### 2.2.2 வீத வரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் அடிப்படை வசதிகளை கொண்டுள்ள பிரதேசமாக இருந்த போதிலும் சபையினால் இது வரை ஆதன வரி அறவிடல் இடம்பெற்றிருக்கவில்லை. | ஆதனவரி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மகா ஓயா பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதன வரி அறவிடுவதற்கு சபை அங்கீகாரம் கிடைக்காமையினால் ஆதன வரி அறவிடப்படாதிருந்ததுடன் உரிய அடிப்படை நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு எதிர்காலத்தில் ஆதன வரி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.2.3 வாடகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 28 கடைகளில் இருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய நிலுவை கடை வாடகை ரூபா 202,494 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | தற்போது ரூபா 50,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணத்தை அறவிடுவதற்காக தற்போது கடை உரிமையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 265,667 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 105,715 ஆக காணப்பட்டது. | நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நீதவான் நீதிமன்றத்தில் இருந்தும், மாகாண இறைவரி திணைக்களத்தில் இருந்தும் கோரப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 05 விடயங்களுக்காக மாத்திரமே உபவிதி விதிக்கப்பட்டிருந்தது. | உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டிற்காகவும் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

(இ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் பிரதேச சபையை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உனுவதுர புபுல அருகில் சுற்றாடலை | நிர்மாணங்களை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு முடியுமான | இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 1,653,779 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2017 |

| | | |
|---|---|---|
| பராமரிப்பு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 535,936 தொகை செலவில் தங்குமிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது. | நிலைக்கு உட்படுத்துதல் வேண்டும். | ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வேலை முடிவுறுத்தப்பட்டு ரூபா 535,936 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மிகுதி வேலைப்பகுதியை பூர்த்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் பணம் வழங்கப்படாமையினால் அந்த கட்டிடத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக அறிந்திருந்த போதும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக அறிந்திருந்த போதும் அதனை நடைமுறையில் அமுல்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i | 2018 திசெம்பர் இல் உள்ளவாறான பதவியணியினரில் 05 பதவிகளில் 08 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் நாட்கூலி அடிப்படையில் 08 ஊழியர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர். | பதவி அணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் மிகை பதவி அணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கபட வேண்டும். | பிரதேச சபையின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஊழியர்கள் தேவையாக இருந்த போதிலும் நிரந்தர ஊழியர்கள் போதியளவில் இல்லாமையினால் ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நாட்கூலி அடிப்படையில் தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| ii. 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சபையில் சேவையாற்றிய, இடம் மாற்றலாகி சென்ற மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 25,359 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த உத்தியோகத்தர்களுக்குரிய நிலுவை பணத்தை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களில் இருந்து கிடைக்க வேண்டிய வருமானம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,735,352 தொகை செலவில் மகஓய உனுவதுரு புபுல அண்மித்த பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலையில் இருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சிற்றுண்டிச் சாலை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

#### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i 09 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரண விடயங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு இடையே அனேகமானவை உடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் உரித்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எதிர்காலத்தில் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே இரண்டாவது சமூக நீர் செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த 02 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக எந்தவித ஆவணமோ அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | | | பதிவேடோ கையளிக்கப்படாதிருந்ததுடன் அவற்றை பெற்று கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ii. | பல்வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற 36 காணிக் கூறுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | காணிகளின் சட்டரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். | இதற்கு முன்னரும் காணி கையேற்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக காணியை கையேற்கும் விண்ணப்பப்பத்திரம் சகல காணிகளுக்காவும் பூரணப்படுத்தி மகாவலி அதிகார சபைக்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் இது வரையிலும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் மீண்டும் அந்த விண்ணப்பங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 33,926,468 தொகை செலவில் கெகரிஹேனவில் 24 கடைகளை உடைய கடைத்தொகுதி ஒன்றும் வாராந்த சந்தை ஒன்றும் கடைத்தொகுதிகளின் கடைகளுக்காக 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது வாடகையாளருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவர்கள் அந்தக் கடைகளை | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கும் வாராந்த சந்தையை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015, 2017 ஆம் ஆண்டுகளில் கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டு அந்த கடைகளை வியாபாரிகளுக்காக திறந்து வைத்த போதிலும் வெற்றிகரமான வியாபாரம் இல்லாமையினால் கடை வாடகைப் பணத்தை குறைக்குமாறு வியாபாரிகள் பல தடவைகள் கடிதம் மூலம் கோரியிருந்தனர். அதற்காக மதிப்பீட்டு திணைக்களத்தில் இருந்து மீண்டும் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதுவரையிலும் உரிய அறிக்கை எங்களுக்கு கிடைக்கவில்லை. உரிய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் மீண்டும் கடை வாடகை திருத்தப்பட்டதன் பின்னர் விற்பனை கடைகளை திறப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். கெகிரிகேன வாராந்த சந்தை 2017 ஆம் ஆண்டில் |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிற்கு எடுக்காதிருந்ததுடன் வாராந்த சந்தைக்குரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்படவில்லை. | | ஆரம்பிக்கப்பட்ட போதும் வியாபாரிகள் வருகை தராமையின் காரணாக வாராந்த சந்தையை நடத்தாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| ii. | சபைக்குச் சொந்தமான ஓடக்கூடிய நிலையில் காணப்படுகின்ற 07 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பயனற்று காணப்படுகின்றன. | வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | 05 வாகனம் மற்றும் இயந்திர உபகரணங்கள் உடைந்த நிலையிலும் ஓடுவதற்கு தேவையான ஆவணங்கள் இல்லாமலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.4.4 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெகோ லோடர் இயந்திரம் 2018 ஆகஸ்ட் 11 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டமையின் காரணமாக இடது பக்க கண்ணாடி வெடித்தமையினால் காப்பிறுதியின் மூலம் ரூபா 72,299 தொகையை வழங்குவதற்கு இனங்கப்பட்டிருந்த போதும் 2019 ஏப்ரல் 11 ஆம் திகதி வரையிலும் பெகோ லோடர் இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காப்புறுதியில் இருந்து பணம் பெறப்பட்டு பழுது பார்க்கும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட வேண்டும். | பெகோ லோடருக்காக இடது பக்க கண்ணாடியை மீண்டும். அமைப்பதற்கு ரூபா 72,299 தொகை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மூலம் வழங்குவதற்கு இனங்கப்பட்டிருந்ததுடன் உரிய கண்ணாடி சேவை வழங்குகின்ற கம்பனியில் காணப்படாமையினால் கம்பனிக்கு கிடைத்ததன் பின்னர் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 வெளிப்படையான மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி சேர்க்கப்பட்டிருந்த 03 நாட்கூலி தொழிலாளர்களும் மற்றும் நாட்கூலி சாரதியும் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி பிரதேச சபையில் சேவைக்கு அறிக்கையிட்டிருந்த போதும் அந்த ஊழியர்களின் பெயரைப் பயன்படுத்தி 2018 யூலை மாதம் சேவை செய்யப்பட்டமைக்கு பதிவேடு தயாரிக்கப்பட்டு 2018 செப்தெம்பர் 04 ஆம் திகதி ரூபா 96,768 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நாட்கூலி தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பாக மேற்பார்வை மட்டத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | 2018 மே 11 ஆம் திகதி நடைபெற்ற சபை மூலம் 04 ஊழியர்களை சேர்ப்பதற்காக அங்கீகாரம் பெறப்பட்டு 2018 யூன் 13 ஆம் திகதி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2018 யூன் 22 ஆம் திகதி நேர்முகப்பரிட்சை நடாத்தப்பட்டு 04 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். 2018 யூலை மாதம் இந்த ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்கு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 மார்ச் 24 ஆம் திகதி வழங்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | தற்போது பிரதேச சபையில் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படாது இருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெறுகை வழிகாட்டி கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி கோருவதற்காக ஆகக் குறைந்த கால எல்லை வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டி கோவையின் பிகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆண்டின் இறுதிக்கு முன்னர் உரிய கொள்வனவுகள் மேற்காள்ளப்பட வேண்டி இருந்தமையால் எனது ஆலோசனையின் அடிப்படையில் உரிய கேள்வி கோரல் கடிதம் நேரடியாக கையளிக்கப்பட்டு துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |